செ.வெ.எண்51/2017 நாள்:17.09.2017

**சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் ஒன்றியத்தில் சொர்ணகாளீஸ்வரர் கோவிலிருந்து பாரத சேவை ரதத்தினை**

**மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப.,அவர்கள் துவக்கி வைத்தார்.**






சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் ஒன்றியத்தில் சொர்ணகாளீஸ்வரர் கோவிலிருந்து பாரத சேவை ரதத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப.,அவர்கள் துவக்கி வைத்து, மேலும், அலுவலர்கள் மற்றும் பொதுமக்களுடன் சேர்ந்து தூய்மைப் பணியினை மேற்கொண்டார். பின்னர், ஒவ்வொருப் பகுதியாகச் சென்று தூய்மைப்படுத்தும் பணியாளர்களின் பணிகளை பார்வையிட்டார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது, அனைத்து அலுவலர்கள், தன்னார்வலர்கள், இளைஞர்கள், பாதுகாப்பு பணியாளர்கள், பெண்கள், விளையாட்டு வீரர்கள், தூய்மை பாரத இயக்கத்தினைச் சார்ந்த தூதுவர்கள், தனியார் நிறுவனங்கள் பங்கேற்று தூய்மைப்படுத்தும் பணி திட்டமிடப்பட்டுள்ளது. பள்ளிக்கூடங்கள், அங்கன்வாடிகள், மருத்துவமனைகள், அரசு கட்டிடங்கள், பேருந்து நிறுத்தங்கள், கோயில்கள் என பல்வேறுப் பகுதிகள், பள்ளி கல்லூரி மாணவ மாணவிகள், பொதுமக்கள், மருத்துவர்கள், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் சுத்தம் செய்யப்பட உள்ளது. ஆகையால், பொதுமக்களாகிய நீங்கள் சுற்றுப்புறங்களை தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். உங்கள் இல்லங்களுக்கு வரும் தூய்மைக் காவலர்களிடம் மக்கும் குப்பை, மக்கா குப்பை என குப்பைகளை பிரித்து கொடுக்க வேண்டும். இல்லங்கள் தோறும் கழிப்பறை அமைத்து பொதுச் சுகாதாரத்தை பேணிக் காக்கவும் கழிப்பறை இல்லாத மாவட்டமாக மாற்ற வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.காஞ்சனா, சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் திரு.சுந்தரமூர்த்தி, மாவட்ட

ஒருங்கிணைப்பாளர் திரு.பல்த்தசார், மாவட்ட உறுப்பினர் திரு நடாலியா ஜோசப், காளையார்கோவில் வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.அன்புத்துரை, வட்டாட்சியர் திருமதி.சந்தானலெட்சுமி மற்றும் அரசு அலுவலர்கள், தூய்மைக் காவலர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

::வெளியீடு::

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,

சிவகங்கை.